# சுற்றுலாப் போர்வையில் மதுபான விற்பனை நிலையங்கள் வடக்கு கிழக்கில் அரசாங்கம் ஊக்குவிப்பதை ஏற்க முடியாது!

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன்

வடக்கு கிழக்கில் சுற்றுலா என்ற போர்வையில் மதுபான விற்பனை நிலையங்களை அரசாங்கம் ஊக்குவிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு எதிராக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே ச.சுகிர்தன் இதனை தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில், உடுப்பிட்டியில் மக்கள் செறிவுள்ள பகுதியில் சில மாதங்களுக்கு முன் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது.

இதற்கு எதிராக மக்கள் பெருமளவில் போராட்டம் செய்தபோது பொதுமக்களின் எதிர்ப்பை கருத்திற் கொண்டு மதுபான விற்பனை நிலையத்தின் அனுமதி தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு மூடப்பட்டது.

ஆனால், தற்போது சில நாட்களாக மதுபான விற்பனை நிலையம் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுகிறது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இமையாணன் இ.த.க பாடசாலை, நவிண்டில் தாமோதரா பாடசாலை என்பன குறித்த மதுபானசாலைக்கு மிகக் குறைந்த தூரத்திலிருக்கிறது.

இதுதொடர்பாக கரவெட்டி பிரதேச செயலாளரை பொது அமைப்புகள் தொடர்பு கொண்டபோது நேரடியாகவும் வாய் மொழி மூலமாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தனக்கு அறிவுறுத்தியதனால் தான் இடத்திற்கான சிபார்சினை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரை சந்தித்து கலந்துரையாடி மகஜரை கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2 ➤



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 24 திங்கட்கிழமை 11.12.2023 கதிர் 131

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்




# யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடமாகாண சமூகமட்ட அமைப்புக்களால், 8 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீரப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன்நீக்குதல், கொக்கிளாய்ப் புதைகுழிக்கு நீதியான விரைவான விசாரணையை முன்னெடுத்தல், மனித சித்திரவதைகளை நிறுத்துதல், பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்துதல், காணாமல்

2 ➤

# உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களைச் சந்திக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மறுப்பு!



சிங்கள பௌத்த பிக்குகளுடன் இணைந்து பிரகடனமொன்றில் கையொப்பமிட்டதை அடுத்து உலக தமிழ் பேரவையுடனான சந்திப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புறக்கணித்துள்ளது.

மாவீரர் நினைவேந்தலின்போது அரசாங்கம் மக்கள் மீது மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தை கட்டவிழ்த்து விட்டதாக அக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்

2 ➤

# விவாகரத்துப் பெறுவதை எளிதாக்கும் மூன்று சட்டமூலங்கள் நாடாளுமன்றில்

விவாகரத்துப் பெறுவதை எளிதாக்கும் மூன்று சட்டமூலங்கள் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திருமண காரணங்கள் சட்டம், வெளிநாட்டு விவாகரத்து தீர்ப்புகளை அங்கீகரிக்கும் சட்டம் மற்றும் சிவில் நடைமுறைச் சட்டங்களில் திருத்தம் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விவாகரத்து கோரி தாக்கல் செய்பவரின் சுமை அதிகமாக உள்ளது என்றும் காரணங்களை நிரூபிப்பது மிகவும் கடினம் என்பதனால் சில

2 ➤

# கொழும்பில் மீண்டும் பதிவு நடவடிக்கை மனோ கணேசன்



கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளிய மற்றும் மோதர பொலிஸ் எல்லைகளுக்குள் மீண்டும் பதிவு நட வடிக்கைகள் இடம்பெறுவதாக நாடாளுமன்றில் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பதிவு நடவடிக்கைள் ஏன் இடம்பெறுகின்றன? என அவர் மன்றில் கேள்வியெழுப்பியிருந்தார்.

யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னரும் கொழும்பில் வசிக்கும் தமிழர்களிடம் பொலிஸார் விபரம் கோருவது குறித்தும் மனோ கணேசன்

2 ➤

# வற் வரிச் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெறும்! பிரேரணை பெரும்பான்மையுடன் நிறைவேற்றம்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தின் பின்னர், வற் வரி திருத்த சட்டமூலத்தை விவாதிப்பதற்கான பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமானதும் சட்டமூலம் மீதான விவாதத்தை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முன்வைத்த எதிர்ப்புக் காரணமாக சபாநாயகர் வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து வாக்கெடுப்பு இடம்பெற்ற நிலையில் ஆதரவாக 92 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

2 ➤

# யாழ் பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் உப தலைவரிடம் விசாரணை!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவனும் கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் உப தலைவருமான இராசரத்தினம் தர்சனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுத்தபோது விடுதலைப்புலிகளின் பாடல் இசைக்கபட்டமை மற்றும் மாணவர் ஒன்றிய செயற்பாடுகள், வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் தொடர்பிலேயே விசாரனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இன்று திங்கட்கிழமை சுமார் 3 மணத்தியாலத்திற்கும் மேலாக விசாரனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது. (01)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி 2024 ஜனவரி 19 முதல் 21 வரை நடைபெறவிருக்கிறது

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH




இலங்கையின் வடக்கு மாகாணத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றவிழைகின்ற வருடாந்த நிகழ்வான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் 14 வது பதிப்பு யாழ்ப்பாணத்தில் 2024 ஜனவரி 19 முதல் 21 வரை, “வடக்குக்கான உங்கள் நுழைவாயில் ” என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.

லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் (LECS) மற்றும் யாழ் வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனம் (CCIY) இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி 2024 இல், இந்தியாவிலிருந்தும் பங்கேற்பாளர்கள் இணைந்துகொள்ளும் 350 க்கும் மேற்பட்ட காட்சியறைகள் அமைக்கப்படவுள்ளன.

LECS இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆசிம் முக்தர் இது குறித்துக் கூறுகையில், இந்த நிகழ்வு இலங்கையின் வடக்கில் உள்ள தனிநபர்கள், சிறு தொழில் முனைவோர், மற்றும் தொழில்முனைவோருக்கு சமூகங்களை மேம்படுத்துவதற்கும் மதிப்பு மிக்க வாய்ப்புகளை வழங்குவதற்கும் அதன் திறனை தொடர்ந்து நிரூபித்துள்ளது.

இவ்வாறான முன்முயற்சிகள் மூலம், இந்த இடைவெளியைக் குறைத்து, நாடு முழுவதும் உள்ள அனைத்து சமூகங்களும் நவீனமயமாக்கப்பட்ட மேல் மாகாணத்திற்கு இணையாக இருப்பதை உறுதிசெய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம், என்று தெரிவித்தார்.

யாழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன தலைவர் கே.விக்னேஷ் குறிப்பிடுகையில், எமது தாயகமான யாழ்ப்பாணத்தில் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நல்வாழ்வை முன்னெடுப்பதற்கு இந்த நிகழ்வு உறுதுணையாக உள்ளது. இது ஒத்துழைப்பின் சக்தி மற்றும் செழிப்பு பற்றிய எங்கள் பகிரப்பட்ட பார்வைக்கு அர்ப்பணிப்புக்கான ஒரு சான்றாகும், என்றார். (04)

## கட்டணம் குறைக்காத முச்சக்கர வண்டிகளில் ஏறாதீர்கள் !

பெற்றோல் விலையை குறைக்கப்பட்டதன் பயனை பயணிகளுக்கு வழங்கியுள்ளோம். அதன்படி முதலாவது கிலோமீட்டருக்கு 90 ரூபாயில் ஆரம்பிக்காத முச்சக்கர வண்டிகளில் பயணிக்க வேண்டாம் , அத்தகைய முச்சக்கர வண்டிகளில் ஏறுவதை தவிர்க்குமாறு தேசிய முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் மஹிந்த குமார தெரிவித்துள்ளார்.

பெற்றோல் விலை குறைக்கப்பட்ட போதிலும் முச்சக்கரவண்டிகளில் பயணக் கட்டணம் குறைக்கப்படாமல் முதல் கிலோமீற்றர் 100 ரூபாவில் ஆரம்பிக்கப்படுவதாக பயணிகளிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெதி-05)

## வற் வரிச் சட்டமூலம் மீதான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய திருத்தங்களின்படி, டீசல், பெட்ரோல், எரிவாயு மற்றும் சோலருக்கும் வற் வரி விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், விவசாய உழவு இயந்திரங்கள் மற்றும் இரசாயன உரங்களுக்கும் வற்ட் வரி விதிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (04)

## கொழும்பில் மீண்டும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வியெழுப்பியிருந்தார்.

மேலும் குறித்த விபரத்தில் என்ன சமயத்தவர் என்று கேட்பது தீபாவளி பொங்கலுக்கு வாழ்த்து அனுப்பவா என்றும் மனோ கணேசன் கேள்வியெழுப்பியிருந்தார்

இதேநேரம் குறித்த பதிவு நடவடிக்கைகளுக்கான விண்ணப்பங்கள் சிங்கள மொழியில் மாத்திரமே உள்ளதாகவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியிருந்தார்.

## விவாகரத்துப் பெறுவதை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாகரத்து வழக்குகள் முடிவடைய 10 முதல் 20 ஆண்டுகள் செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு விவாகரத்து தீர்ப்புச் சட்டத்தின் கீழ், வெளிநாட்டு நீதிமன்றங்களால் வழங்கப்படும் விவாகரத்துகள் இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படும் என விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அவசர மற்றும் இடைக்கால நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் சம்மன்களை வெவ்வேறு வழிகளில் வழங்குவதற்கு சட்டத்தில் திருத்தம் செய்யவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகிறது. (04)

## யாழ்ப்பாணத்தில் இன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை விரைவுபடுத்துதல், பூநகரிப் பிரதேசத்தில் பொன்னாவெளிப் பகுதியில் சுண்ணக்கல் அகழ்வையும் சீமெந்துத் தொழிற்சாலை அமைப்பதையும் உடன் நிறுத்துதல், மன்னார்தீவில் கனியமண் அகழ்வை உடன் நிறுத்துதல்,மன்னார் தீவில் காற்றாலை மின்சாரத்தை அமைக்காது, அதனை வேறுபகுதிக்கு மாற்றுதல் என எட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகத் தமிழர் பேரவை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

இந்தப் பின்னணியில், அரசாங்கத்திடம் பிரகடனத்தை கையளித்தமையானது வெள்ளையடிப்புக்கான செயற்பாடு என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பாக தாயகத்தில் உலகத் தமிழ் பேரவையானது எவருடனும் கலந்தாலோசித்திருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்கு பயணம் செய்துள்ள உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களைச் சந்திக்க நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மறுப்பு தெரிவித்துள்ளார். (04)

## சுற்றுலாப் போர்வையில் மதுபான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு வருடங்களுக்கு முன்னரும் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு பல சமூக சீரழிவுகள் ஏற்பட்டதால் பொது மக்கள் போராட்டம் செய்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட்டது. இரண்டாம் தடவையாக கொண்டுவர முயற்சித்தும் அது முடியாத நிலையில் மூன்றாவது தடவையாக திறக்கப்பட்ட மதுபான நிலையம் பொதுமக்கள் எதிர்ப்பினால் மூடப்பட்ட போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அதில் தலையிட்டு அதை திறந்து வைக்க உத்தரவிட்டார். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரது சந்திப்பில் சாதகமான முடிவு கிடைக்குமென பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

இது புதிய மதுபானசாலை அல்ல. கடந்த காலங்களில் நெல்லியடியில் இயங்கிய மதுபான விற்பனை நிலையமே இங்கு இடமாற்றப்பட்டுள்ளது. ஆகவே அது பழைய இடத்திலேயே இயங்குவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்த இடத்தில் இருந்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட வேண்டும். இதற்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் சுற்றுலாவை விருத்தி செய்ய வேண்டுமானால் சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மதுபானத்தை காட்டி எங்கள் பிரதேசங்களுக்கு சுற்றுலா பயணிகளை கொண்டுவர வேண்டிய தேவை இல்லை - என்றார். (01)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

**செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட**

காலைக்கதிர் TV

**காலைக்கதிர் TV YouTube தளம்**

# வீரத்திடல் அல்ஹிதாயாவில் மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு




(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி பிரதேச வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தின் முதல் மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு பார்வையாளர்களாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா, வலய மாணவர் நாடாளுமன்ற இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எச். நைரூஸ்கான் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முறையான நாடாபாராளுமன்ற அமர்வு போன்று மாணவர் பாராளுமன்ற நிகழ்வு முறைப்படி செங்கோல் சபாநாயகர் பிரசன்னத்துடன் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் நடைபெற்றது.

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்திற்கு கணினி மேசைகளும் கதிரைகளும் அன்பளிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கமு.கமு.சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் தற்போது பாடசாலைக்கு மிகவும் அவசிய தேவையாக இருந்த பாடசாலை தளபாடங்கள் தொடர்பான கோரிக்கை ஒன்றினை பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர் அவர்களிடம் முன்வைத்தனர்.

பாடசாலையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்ததிற்கு மிகவும் அவசிய தேவையாக இருந்த ஒரு தொகுதி தளபாடங்களை பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர் அவர்களின் சொந்த நிதியின் மூலம் வழங்கிவைக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல சமூக சேவையாளரும், தொழிலதிபரும், நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகரும், பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் கலந்து சிறப்பித்ததோடு தளபாடங்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டங்களை காட்டிய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் பிரதம அதிதியினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# விசேட தேவையுடையவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன



(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் சமூக சேவை உத்தியோகர்த்தர் ஏ.அஹமட் சபீர் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டலிலும், அபிவிருத்தி உத்தியோகர்த்தர் எம்.என்.ஸியாத், சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகர்த்தர் எஸ். சிவபாதம், அபிவிருத்தி உத்தியோகர்த்தர் எம்.எம்.முஹம்மட் றிப்னாஸ் ஆகியோரின் பங்குபற்றலுடன் விசேட தேவையுடையோருக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

விசேட தேவை உபகரணங்களான முச்சக்கர துவிச்சக்கர வண்டியொன்றும், கழிப்பிட வசதியுடன் கூடிய சக்கர நற்காலியும், சாதாரண நற்காலியொன்றும் உரிய பயனாளிகளின் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

# கல்முனையில் மூத்த ஆலிம்கள் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாரை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் உள்ள மூத்த ஆலிம்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளைக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அஷ்-ஷெய்க் அல்-ஆலிம் அல்-முப்தி ஏ.எல்.எம். முர்ஷித் (ஸஃதி, நஜ்மி) தலைமையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளைக் காரியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வெலிகம பாரி அரபுக் கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் அல்-ஆலிம் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் (மழாஹிரி)கலந்து கொண்டார். இதன் போது நீண்ட காலமாக ஆலிம்களாக கடமையாற்றிய மூத்த ஆலிம்களான, அஷ்ஷெய்க்.எம்.எல்.முஹம்மத் சுல்தான் (கபூரி), அஷ்-ஷெய்க் இஸட் முஹம்மத் நதீர் (ஷர்க்கி), அஷ்-ஷெய்க் எம்.ஐ.முஹம்மத் ரபீக், அஷ்-ஷெய்க் எஸ்.எம்.முஹம்மத் ஆரிப் (நத்வி), அஷ்-ஷெய்க் எம்.எம். உதுமாலெப்பை (நூரி), அஷ்-ஷெய்க் யூ.எல். சாகுல் ஹமீத் (ஹாமி), அஷ்-ஷெய்க் ஏ.எம். முபாறக் அப்துல் மஜீட் (கபூரி,மதனி), அஷ்-ஷெய்க் யூ.எல்.எம். இக்பால் (ஹாமி), அஷ்ஷெய்க் எஸ்.எச். குதுபுத்தீன் (ஹாமி), அஷ்-ஷெய்க் கே.எம்.ஹாறூன் (சலபி), அஷ்-ஷெய்க்.பி.எம்.நிஸாம்

(ஹாஷிமி), அஷ்-ஷெய்க் எம்.சி. அப்துஸ் ஸமட் (துப்லீகி), அஷ்-ஷெய்க்.ரி.ரிபானுத்தீன் (பலாஹி), அஷ்-ஷெய்க்.ஐ.எல்.வலியுல்லாஹ் (ஹாமி), அஷ்-ஷெய்க்.ஐ.எல்.நசீர் அஹமட் (நிழாமி) ஆகியோர் நினைவு சின்னம் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டனர்.



# செல்வாக்குமிக்க உலகத் தலைவர்களின் பட்டியலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து முதலிடம்




செல்வாக்குமிக்க பிரபலமான உலகத் தலைவர்களின் பட்டியலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து முதலிடத்தில் பிடித்துள்ளார்.

மோர்னிங் கன்சல்ட் நிறுவம் நடத்திய ஆய்வில் பங்கேற்றவர்களில் 76 சதவிதம் பேர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமைப் பண்பு சிறப்பாக இருப்பதாக கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9 ஆண்டுகளில் மோர்னிங் கன்சல்ட் வெளியிட்ட கருத்துக்கணிப்பில் 75-80 சதவீத வாக்குகளைப் பெற்று இந்தியப் பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கருத்துக்கணிப்பு நிறுவனமான 'மோர்னிங் கன்சல்ட்', உலகம் முழுவதும் செல்வாக்குமிக்க தலைவர்கள் குறித்து அந்தந்த நாடுகளில் அவ்வப்போது கருத்துக் கணிப்பு நடத்து முடிவுகளை வெளியிட்டு வருகிறது. அதன்படி, 22 நாடுகளில் கருத்துக் கணிப்பு நடத்தி செல்வாக்குமிக்க உலகத் தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 76 சதவீத வாக்குகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறார். ஹ18 சதவீதம் பேர் அவரது தலைமையை விரும்பவில்லை என்றும், 6 சதவீதம் பேர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்றும் அறியவந்துள்ளது.

இதற்கு முந்தைய கருத்துக்கணிப்புகளிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உலகத் தரவரிசையில் முதலிடத்தில் இருந்தார். அதே நேரத்தில், மற்ற பெரிய உலகளாவிய தலைவர்களின் மதிப்பீடுகள் ஒரு சாதாரண மட்டத்திலேயே உள்ளன.

மெக்சிகோ அதிபர் அண்ட்ரெஸ் மானுவல் லோபஸ் ஒபராடோர் 66 சதவீத வாக்குகளுடன் இரண்டாவது இடத்திலும், சுவிட்சர்லாந்து அதிபர் அலைன் பெர்செட் 58 சதவீத வாக்குகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில-வா 49 சதவீத வாக்குகளும், அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பானீஸ் 47 சதவீத வாக்குகளும், இத்தாலிப் பிரதமர் ஜார்ஜியா மெலோனி 41, பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டி குரோ 37 சதவீத வாக்குகளுடன் அடுத்தடுத்த இடத்தை பிடித்தனர்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 37 சதவீத வாக்குகளுடன் 8 ஆவது இடத்திலும், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 31 சதவீத வாக்குகளும், பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் 25 சதவீத வாக்குகளும், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் 24 சதவீத வாக்குகளுடன் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளனர். (04)

# நர்கீஸ் முகமதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு அவருக்காக மகனும் மகளும் பெற்றுக் கொண்டனர்



ஈரானில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், ஜனநாயகத்தை வலியுறுத்தியும் போராடி வரும் மனித உரிமை ஆர்வலர் நர்கீஸ் முகமதிக்கு அறிவிக்கப்பட்ட நடப்பாண்டு அமைதிக்கான நோபல் பரிசை அவரது மகன், மகள் இருவரும் நேற்றுப் பெற்றுக் கொண்டனர்.

ஈரானில் பல ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து வரும் நிலையிலும் அயராது பணியாற்றி வருவதற்காக, நர்கீஸ் முகமதிக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டது.

ஈரானில் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப ஹிஜாப் அணியாத குற்றச்சாட்டில் கைதான மாஷா அமினி என்ற இளம்பெண், போலீஸ் காவலில் கடந்த ஆண்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, ஈரான் முழுவதும் பெரிய அளவில் வன்முறைப் போராட்டங்கள் நடைபெற்றன.

இது தொடர்பான குற்றச்சாட்டில் தற்போது நர்கீஸ் சிறையில் இருந்து வருகிறார்.

பொறியாளரான நர்கீஸ், ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் கருத்துரிமைக்கான 'சகரோவ்' பரிசை கடந்த 2018- இல் பெற்றார். மேலும், நடப்பாண்டு அமைதிக்கான நோபால் பரிசு நர்கீஸ் முகமதிக்கு அறிவிக்கப்பட்டது. நர்கீஸ் முகமதி அமைதிக்கான நோபல் பரிசு பெறும் 19-ஆவது பெண்ணும் ஈரான் நாட்டைச் சேர்ந்த 2 ஆவது பெண்ணும் ஆவார்.

ஈரானில் மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு உள்ளதாக கைதானவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கும் தெஹ்ரானின் எவின் சிறையில் இவர் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், நார்வேயின் ஓஸ்லோ நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் நர்கீஸ் முகமதிக்கு அறிவிக்கப்பட்ட நோபல் பரிசை பாரீஸில் வசித்து வரும் அவரது மகன் அலி ரஹ்மானி மற்றும் மகள் கியானா ரஹ்மானி பெற்றுக் கொண்டனர்.

சர்வதேச ஆதரவு தேவை: இதையடுத்து, செய்தியாளர் சந்திப்பில் கியானா ரஹ்மானி வாசித்த குறிப்பில், அரசு அதிருப்தியாளர்கள், எதிர்ப்பாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களின் குரலை உலகுக்கு தெரிவிப்பதில் சர்வதேச ஊடகங்கள் ஆற்றிய பங்கை நர்கீஸ் பாராட்டினார்.

மேலும், ஈரானிய சமுதாயத்துக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு தேவை. இஸ்லாமிய குடியரசு அரசின் அழிவுகரமான கொடுங்கோன்மைக்கு எதிரான கடும் போராட்டத்தில் செய்தியாளர்கள் மற்றும் ஊடக வல்லுநர்கள்தான் மிக முக்கியமான கூட்டாளிகள். ஈரானிய மக்களுக்காக உங்கள் அனைவரின் முயற்சிகளுக்கும் மனபூர்வமாக நன்றி கூறுவதாக நர்கீஸ் தனது குறிப்பில் தெரிவித்திருந்தார்.

கியானா ரஹ்மானி கூறுகையில், எனது தாயை மீண்டும் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஒருவேளை, அடுத்த 30 அல்லது 40 ஆண்டுகளில் நான் அவரைப் பார்க்கலாம். ஆனால், அதுகுறித்து எனக்கு கவலை இல்லை. ஏனென்றால், என் இதயத்திலும் போராட்டங்களுக்கான மதிப்பிலும் அவர் எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பார், என்றார்.

ஈரானில் உள்ள பஹாய் மத சிறுபான்மையினருக்கு ஆதரவாக நர்கீஸ் ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதாக அவரது கணவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

122 ஆண்டுகால நோபல் வரலாற்றில் சிறையில் உள்ள ஒருவருக்கு அமைதிக்கான பரிசு அளிக்கப்படுவது இது 5 ஆவது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்




ஆப்கானிஸ்தானில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்த நாட்டின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

பைசாபாத்தில் இன்று (டிச.11) காலை 8.04 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 180 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 4.4 அலகுகளாகப் பதிவாகியுள்ளதாக அந்நாட்டுத் தேசிய நில அதிர்வு மையம் கூறியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச்சேதமோ அல்லது பொருட்சேதமோ ஏற்பட்டதாக எந்தவித தகவலும் இல்லை.

முன்னதாக, கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி 4,000 -க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

அதனையடுத்து ஒக்டோபர் 13, 15 மற்றும் நவம்பர் 21 ஆம் திகதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்று 4.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் இன்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (04)

# பிணைக்கைதிகள் உயிருடன் நாடு திரும்பமாட்டார்கள்! இஸ்ரேலுக்கு ஹமாஸ் அமைப்பினர் கடும் எச்சரிக்கை



இஸ்ரேல், காஸா மீது தொடர் தாக்குதல்களை நடத்தி 17,000 த்துக்கும் அதிகமான மக்களைக் கொன்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகிவரும் நிலையில், கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் பிணைக் கைதிகள் உயிருடன் நாடு திரும்ப மாட்டார்கள் என ஹமாஸ் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

ஹமாஸ் அமைப்பு அழிந்து வருகிறது, தீவிரவாதிகள் சரணடைந்து வருகிறார்கள், என இஸ்ரேல் படைத் தலைவர் தெரிவித்துள்ள நிலையில் ஹமாஸ் அமைப்பிடமிருந்து இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

கடந்த அலக்டோபர் 7 இல் ஹமாஸ், இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டனர், 240 பேர் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. பிணைக்கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமெனில், இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு நடத்திய இந்த தாக்குதல் சர்வதேச அளவில் இஸ்ரேலின் மதிப்பை குறைக்கும் விதமாக அமைந்தது. இதனால் ஏற்பட்ட போர் கடந்த இரண்டு மாதங்களாக நடந்து வருகிறது. 17,000 த்திற்கும் அதிகமான மக்களைக் கொலை செய்துள்ளதாகக் கருதப்படும் இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பை அழிக்காமல் போரை நிறுத்தப்போவதில்லை என உறுதியாகத் தெரிவித்துள்ளது.

7 நாள்கள் நடைபெற்ற தற்காலிக போர் நிறுத்தத்தில், 80 இஸ்ரேல் பிணைக் கைதிகளுக்கு இணையாக 240 பாலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (04)

# மாணவிகளின் மத நல்லிணக்க களப்பயணம்!






(காரைதீவு சகா)

நிந்தவூர் அல் மஸ்ஹர் பெண்கள் கல்லூரி மாணவிகள் வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு இனமத நல்லிணக்க களப் பயணம் ஒன்றை கடந்த சனிக்கிழமையன்று மேற் கொண்டிருந்தார்கள் .

கல்லூரி அதிபர் ஏ.எல்.நிஷாமுடீன் தலைமையிலே மாணவிகள் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

அங்கு இஸ்லாமிய மாணவிகள் ஆலய நடைமுறைகளையும் இந்து வழிபாட்டு முறைகளையும் அறிந்து கொண்டார்கள்.

ஆலய பரிபாலன சபை தலைவர் கே.ஜெயசிறிலின் வேண்டுகோளுக்கு அமைவாக ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆலயம் தொடர்பான வரலாற்றை அந்த மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

கூடவே இனமத நல்லிணக்கம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

அந்த மாணவிகள் முதன்முறையாக ஒரு இந்து ஆலயத்திற்கு வருகை தந்தமையை சுட்டி காட்டினார்கள். மற்றும் அதிபர்ஆசிரியர்களும்நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த பயணம் தமக்கு திருப்தி அளித்ததாகவும் அவர்கள் கூறினார்கள்.

## மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் சித்திர கைவினைக் கண்காட்சி இடம்பெற்றது!



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு.கமு. சபீனா முஸ்லிம் வித்தியாலய ஆசிரியை திருமதி எம்.ஏ.ஆர். பாத்திமா சியானா அவர்களின் நெறிப்படுத்தலில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி அவர்களின் தலைமையில் சித்திர கைவினைக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, காரைதீவு கோட்டக்கல்விப் பணிப் பாளரும், கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவி கல்வி பணிப்பாளருமான ஏ. சஞ்ஜீவன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த சித்திரக் கண்காட்சி சிறப்பாக நடைபெற வழிகாட்டியாக இருந்த காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. சஞ்ஜீவன் அவர்களுக்கும், பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி அவர்களுக்கும் நிகழ்வுக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கி ஏற்பாடுகளை மிக நேர்த்தியாக செய்த பாடசாலை பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.எம். இர்ஷாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.எம்.நாஸிக் ஆகியோருக்கு ஆசிரியை திருமதி எம்.ஏ.ஆர். பாத்திமா சியானா நிகழ்வின் முடிவில் நன்றிகளை தெரிவித்தார்.




## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சாய்ந்தமருது டொக்டர்.சஹிலா இஸ்ஸதீன் கடமையேற்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளராக வைத்திய கலாநிதி

திருமதி.சஹிலா இஸ்ஸதீன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளராக கடமைற்றிய டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளராக இடமாற்றப்பட்டதை யடுத்து, ஏற்பட்ட இந்த வெற்றிடத்திற்கு பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக செயற்பட்டு வந்த சாய்ந்தமருதைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி. சஹிலா இஸ்ஸதீனுக்கு பணிப்பாளர் பதவியுயர்வு வழங்கப்பட்டு அவர் கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

## பிரதேச வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கல்



(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் 1996ஆம் ஆண்டு சாதாரண தரம் கல்விகற்ற மாணவ நண்பர்கள் குழாத்தினரால் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கிவைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் நீண்டகால தேவையாக இருந்து, வைத்தியசாலையின் நிருவாகத்தினர் விடுத்த வேண்டுகோளினை கருத்திற்கொண்டு இச் சக்கர நாற்காலி வழங்கிவைக்கப்பட்டது. வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர், அல்-ஹாபிழ் யு.எல்.எம். வபா அவர்களிடம் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் மாணவ நண்பர்கள் குழாத்தின் தலைவர் தாதிய உத்தியோகத்தர் எம்.எல்.ஜெசீல் , செயலாளர் எஸ்.எம்.சித்தீக் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் முன்னாள் தலைவரும், அதிபருமான ஏ.எம். மிஸ்வர், ஆசிரியர் கே.எல்.எம்.முனாஸ் , முன்னாள் செயலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எம். நபீஸ்தீன் , சஷா நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளரும் உறுப்பினருமான எஸ். அஜ்வர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை நண்பர்கள் குழாமாகவிருந்து இப்பிரதேசத்தில் நீண்டகாலமாக பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் முச்சக்கரவண்டியில் நடத்தப்படுகின்ற நடமாடும் நூலகச் சேவை!

## கவிஞர் வடிவழகையனின் முகநூல் பதிவிலிருந்து





கடந்த புதன் காலை கிளிநொச்சிக்குச் செல்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்தில் பயணப்பட்டேன்.

சாவகச்சேரியில் –

சாவகச்சேரி நகர் கழிந்தபோது, பேருந்துக்கு சமாந்தரமாக புகையிரதமும் பிந்தியும் முந்தியும் தனது தடத்தில் வந்துகொண்டிருந்தது.

சாவகச்சேரி நகர் கழிந்த போது புகையிரத இருப்புப் பாதையை குறுக்கறுத்து வந்து பிரதான வீதியில் ஏறும் பாதுகாப்பற்ற கடவைகளில், புகையிரதம் அப்பகுதியைக் கடக்கும் வரை, அப்பகுதி மக்கள் வீதியை மறித்து கயிறுகளால் கட்டி வீதியை மறித்து வைத்திருந்ததையும், புகையிரதம் கடந்ததும் கயிறுகளை அவிழ்த்துவிட்டு சென்றதையும் பேருந்திலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அந்நேரத்தில் வீதியைக்கடக்க வந்த மாணவர்களும் பொதுமக்களும் காத்து நின்று புகையிரதம் கடந்ததும் பயணித்தனர். இந்த விதமாக மிருசுவில், எழுதுமட்டுவாழ் வரை இடைக்கிடை இச்செயற்பாட்டினைக் காணக்கிடைத்தது. கடந்த காலத்தில் இப்பகுதிகளில் புகையிரத மனித விபத்துக்கள் நடைபெற்றதை தவிர்க்கும் நோக்குடன் பொதுமக்களாக தன்னார்வத்துடன் ஈடுபடுகிறார்கள் போலும். நல்லது செய்வதற்கு காசு பணம்தான் இருக்கவேண்டுமென்பதில்லை.

கிளிநொச்சியில் –

மாலையில் மாகாண பண்பாட்டு விழா முடிவுற்ற கையோடு இயல்வாணன் அவர்களும் நானும் அருகில் இருந்த காண்பியக்கூடத்திற்கு சென்றோம். அங்கு புகைப்படங்கள், ஓவியங்கள், தமிழர்களின் வாழ்வியல் பயன்பாட்டுப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அருகில் புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனையும் நடந்து கொண்டிருந்தது. அதில் இரு புத்தகங்களை வாங்கிக் கொண்டேன். புறப்படும் போது வாசலில் பார்த்தால் ஆச்சரியமொன்று நின்றுகொண்டிருந்தது.

ஆம்! அந்த ஆச்சரியம் ஒரு முச்சக்கர வண்டி. அதில் நடமாடும் நூலகம் என்று எழுதப்பட்டு அந்த ஆட்டோ அதற்காகவே வடிவமைக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அடடே! என்று ஆச்சரியப்பட்டவாறே எப்படி இப்படி ஐடியா வந்தது? யார் இதைச் செயற்படுத்துகிறார்? என்று அறிய முற்பட்ட போது அருகில் தென்பட்ட நபர், தே.பிரியன்.

அவரிடம் இது தொடர்பாக வினவியபோது தெரிந்து கொண்ட விடயங்கள்:

இந்த ஆட்டோவை நடமாடும் நூலகமாக ஆக்கி வன்னி மாணவர்களுக்கு நூலக சேவையை வழங்க நிதி அனுசரணை செய்துகொண்டிருப்பவர் தற்போது சிங்கப்பூரில் வாழும் சுப்பிரமணியம் கலைவாணி என்ற பெண்மணி.

இந்த நூலகம் வன்னியில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் தனது சேவையை நடத்துகிறது.

தே.பிரியன் என்பவரே இதனை இயக்கி வருகிறார்.

மாதாந்தம் இருபது வரையான பாடசாலைகளுக்கு இந்நூலகத்தின் சேவை எட்டுகிறது.

வன்னிப் பாடசாலைகள் அதிக தூரமுள்ள கிராமங்களில் அமைந்திருப்பதால் மாதாந்தம் ஏறத்தாழ ரூபாய் ஒரு இலட்சம் வரை இயக்குபவர் ஊதியம் மற்றும் எரிபொருளுக்கான செலவீனமாக ஏற்படுகிறது. அதனை கலைவாணி அவர்களே ஏற்றுக் கொள்கிறார்.

குறித்த பாடசாலைகளுக்கு செல்வதற்கு முன்னரே நாள், நேரம், குறிப்பிட்டு கல்வித் திணைக்கள முன்அனுமதி பெற்று அப் பாடசாலைக்கு செல்கிறது நூலகம்.

நூலகத்தின் வருகையை எதிர்பார்த்திருக்கும் பாடசாலையில், நூலக பாடவேளை அல்லது பாடம் இல்லாத பொழுதுகளில் மாணவர்கள் இந்நூலகத்தில் நூல்களைப்பெற்று மரங்களுக்குக் கீழிருந்தே வாசித்து விட்டு உடனே நூலகத்தில் வைத்துவிடுகிறார்கள்.

ஏனெனில் அடுத்த நாள் இந்நூலகம் இன்னோர் பாடசாலைக்குச் செல்லவேண்டுமல்லவா?

அநேகமாக ஆறாம் வகுப்பிற்கு உட்பட்டவர்களுக்கான நூல்களே இதில் உள்ளன. எனது அவதானிப் பின்படி இதற்கான நூல்களின் தேவைப்பாடு இன்னும் தேவையாக உள்ளது.

மாணவர்களுக்கான நூல்களை இதற்கு அன்பளிக்க விரும்புபவர்கள் அல்லது இதனை விஸ்தரிக்கும் நல்லெண்ணம் கொண்டோர் தே.பிரியனின் கீழுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் – 0766819221


அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறப்பல்லவா?

(இதற்கு புத்தகங்களை வழங்க எனக்கும் விருப்பம் தான். என்னிடமிருந்த 50 வரையான சிறுவர் புத்தகங்களை கடந்த வருடங்களில் மல்லாவி மகாவித்தியாலய மாணவர் விடுதியில் நூலகம் அமைப்பதற்காக வழங்கிவிட்டேன்)






## சம்மாந்துறை நீர்ப்பாசன திணைக்கள வடிச்சல் வாய்க்கால் சேதமடைவு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பாலயடி போட்டா , தொய்யம் வட்டை கீழ்க் கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல்நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் வடிச்சல் நீர் கிறவல் ஆற்றில் சேருமிடத்திலுள்ள வாய்க்கால் சேதமடைந்து பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வாய்க்கால் சேதமடைந்துள்ளதால் இதன் மேலான போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள்ளது. இதனால் ஏனைய வயல்களுக்கு செல்லும் விவசாயிகளும் உழவு இயந்திரங்களும் சுற்றி வளைத்தே தமது வயல் நிலங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் வாய்க்கால் ஆழமாகவுள்ளதால் இருபுறமும் உள்ள வயல் நிலங்கள் ஒவ்வொரு போகத்தின் போதும் இடிந்து விழுவதால் விவசாயிகள் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வட்டவிதானைகள் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை இவ்வாய்க்கால் திருத்த வேலைகள் இடம்பெறாமல் இருப்பது மிகவும் கவலையளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## யானையின் உடலம் மீட்பு




(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா வான் எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருனலு குளத்து பகுதியில் இறந்த நிலையில் யானையின் உடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யானையின் உடலமானது நேற்று மாலை மீட்கப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சென்று யானையின் இறப்பு பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

எட்டு வயது மதிக்கத்தக்க பெண் யானை எனவும் தெரியவருகிறது. யானையின் இறந்த உடலம் தொடர்பில் அப்பகுதி விவசாயிகள் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் யானையின் உயிரிழப்பு தொடர்பில் கால் நடை வைத்திய அதிகாரியின் உடல் கூற்று பிரேத பரிசோதனை இடம் பெறவுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை வான்எல பொலிஸார் மற்றும் கந்தளாய் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2023இல் வெளியிடப்பெற்றது.